சார்பு நீதிமன்றம், பல்லடம்.

MCOP.No. 192/2022

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி : RW1

பெயர் மற்றும் வயது : பால்ராஜ்

தந்தை பெயர் : வேல்முருகன்

தொழில் :

கிராமம் :

தாலுகா : பல்லடம்

மாவட்டம் : திருப்பூர் மாவட்டம்.

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 19 ஆம் நாள் வியாழக்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை.

1. நான் தற்போது மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 காங்கயம் பகுதி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றி வருகிறேன். இந்த வழக்கு தொடர்பாக சாட்சியம் அளிக்க எனக்கு வழஙகப்பட்ட நடைமுறை ந.க.எண். 7219/A2/2025 எ.ம.சா.ஆ– 1 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது/ மேற்படி சம்மனில் கோரியுள்ள TN 42 AX 5808 லாரியின் ஆய்வு அறிக்கை எ.ம.சா.ஆ. 2 ஆகவும் , மேற்படி TN 42 AX 5808 லாரி சோதனை அறிக்கை எ.ம.சா.ஆ– 3 ஆகவும், மேற்படி லாரி TN 42 AX 5808 ஓட்டுருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என ஓட்டுநர் செலுத்திய அபராத ரசீது எ.ம.சா.ஆ.4 ஆகவும், மற்றொரு லாரி TN 34 W 3899 வாகனத்தின் ஆய்வு அறிக்கை எ.ம.ச.ஆ. 5 ஆகவும், மேற்படி லாரி TN 34 W 3899 ஓட்டுருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை என ஓட்டுநர் செலுத்திய அபராத ரசீது எ.ம.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1. 1 ம் எதிர்மனுதாரர் எங்களது வட்டார போக்குவரத்து எல்லைக்குள் வசித்து வருகிறாரா என்றால் இல்லை. மேற்படி ஆய்வு அறிக்கையில் 1 வது எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதார் வேறு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் எடுத்திருக்கலாம் என்றால் நாங்கள் கோரிய

போது அவர் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணங்கள் பரிசீலனை செய்யாமல் எங்களது அலுவலகத்தில் ஆய்வு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.